**தலைப்பு 306 - இலங்கை புகையிரதத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 306 - இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்து மூடும் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 20 ஆந் திகதி திணைக்களத்தின் புகையிரத பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்து மூடும் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று ஆகியவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 58,051.69 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 44,485.03 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 13,566.66 மில்லியன் அல்லது 23.37 சதவீதமாகக் காணப்பட்டது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 14,165.49 | 14,048.78 | 116.71 | 0.82 |
| மூலதனம் | 43,886.20 | 30,436.25 | 13,449.95 | 30.65 |
| **மொத்தம்** | **58,051.69** | **44,485.03** | **13,566.66** | **23.37** |

## 2.1 வருமானக் கணக்குகள்

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 20.01.01.00 ஆம் இலக்க வருமான குறியீட்டிற்காக ரூபா 6,000 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 6,334 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானத்தினை ரூபா 334 மில்லியனால் அல்லது 5.57 சதவீதத்தை மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடியானனை வ | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானனை வ | அதிகூடிய எல்லை | உள்ளபடியானனை வ |
| ரூபா மில்லியன | ரூபா மில்லியன | ரூபா மில்லியன | ரூபா மில்லியன | ரூபா மில்லியன | ரூபா மில்லியன |
| 545.00 | 488.58 | 400.00 | 420.75 | 1,500.00 | 851.06 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 8003 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 649.5 மில்லியனாக இருந்தது.

**2.4 களஞ்சிய முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30602 ஆம் விடய இலக்கத்தின் கீழ் களஞ்சிய முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **அதிகூடிய எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **அதிகூடிய எல்லை** | **உள்ளபடியானவை** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2,000.00 | 1,957.55 | 1,800.00 | 1,490.88 | 6,935.00 | 6,780.03 |

**2.5 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழுள்ள 02 வைப்புக் கணக்குகளின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 321.9 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **வைப்புக் கணக்கு வகை** | **2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா மில்லியன்** |
| நானாவித வைப்புக்கள் | 202.2 |
| விலைக்கேள்வி வைப்புக்கள் | 119.7 |
| **மொத்தம்** | **321.9** |

**2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

இலங்கை புகையிரத திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, முற்பணக் கணக்கு முயற்சிகளை முடிவுறுத்துவதற்கான கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2016 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அந்த கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு/விடய இலக்கம் | கணக்கின் பெயர் | 2016 மே 31 ஆந் திகதி வரையில் தாமதம் |
|---|---|---|
| 306 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 60 நாட்கள் |
| 30601 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று | 31 நாட்கள் |

### 3.2 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, கணனி உதிரிப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஏஜஏ/2002/ 02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஈ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

அடையாளத்தை உறுதி செய்யும் சான்றுகள், கடமை தொடர்பான தகவல்கள், பொருள் விநியோகக் கட்டளைகள், மதிப்பாய்வுச் சபை அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் போன்ற தேவையான சான்றுகள் திணைக்களத்தில் இல்லாதிருந்தமையால் ரூபா 31,100.80 மில்லியன் கூட்டுத்தொகையான பணத்திற்குரிய 07 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது போயிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

இது தொடர்பில் பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் பேணிச்செல்லப்படுகின்ற கணக்குகள் தொடர்பில் பொதுத் திறைசேரிக்கு அறிவித்தல் மற்றும் தொடர்ச்சியான கணக்கீட்டு தொடர்பொன்றினைப் பேணிச் செல்லல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பான போதிலும், அதற்கு முரணாக ரூபா 321.95 மில்லியன் தொகையான பொது வைப்புக் கணக்கின் மீதி

தொடர்பில் திறைசேரிக்கு அறிவித்தல் அல்லது வருடாந்த ஒதுக்கீட்டு வெளிப்படுத்தப்படலேனும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 565(3) பிரகாரம் பொது வைப்புக் கணக்கு மாதாந்தம் தயாரிக்கப்பட்டு மீதிகள் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 565(5) இன் பிரகாரம் மாதாந்த வைப்பு பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 வருமானக் கணக்கு**

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.01.01.00 உடைய வருமான குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் பொன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அவ்வருமானக் குறியீட்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 1,430.29 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானங்கள் 01 முதல் 15 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலவீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதிலான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வருமானக் குறியீட்டிற்குரித்தாக சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 61.61 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானத்தில் திணைக்களத்திற்குரிய வருமானம் இனங்காணப்பட்டு உரிய வருமானக் குறியீடுகளுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் வைப்புக் கணக்கில் 01 ஆண்டு முதல் 02 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் மாதத்திற்கான வருமானத்தை கணக்கீடு செய்யும் போது ரூபா 144.00 மில்லியன் தொகையான வருமானம் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**3.6 அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

30601 ஆம் விடய இலக்க அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 92,876,772 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 01 முதல் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலவீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அவற்றை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தினால் 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், கடன் மற்றும் முற்பண மீதிகளைக் காட்டும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தலின் பொழிப்பு தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அநுராதபுரம் போக்குரவத்து அதிகாரசபை அலுவலகத்திற்குரிய ரூபா 4,153,547

தொகையான கடன் மீதிக்காக எதவித மீதிப் பட்டியலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களப் புத்தகத்தின் படி வரவு மீதி ரூபா 846.88 மில்லியன் தொகையாக இருந்ததுடன், திறைசேரி கணணி அச்சிடல் குறிப்புக்களின் படியான மீதி ரூபா 851.06 மில்லியனாக இருந்தது. அதன் படி 2004 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 4.18 மில்லியன் தொகையான வேறுபாடு 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த வேறுபாட்டினை இணக்கம் செய்து தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒவ்வொரு மாதத்தினதும் இறுதியில் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி மற்றும் CC10 பதிவேட்டுடன் இணக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தப்பட்ட பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளுக்கிடையே ரூபா 13.29 மில்லியன் தொகையான வேறுபாடொன்று நிலவியது.

**3.7 கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து முடிவுறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முற்பணக் கணக்கு**

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 05 முற்பணக் கணக்கு செயற்பாடுகளின் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து முடிவுறுத்தும் நடவடிக்கைகள் 1987 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 28 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 05 முற்பணக் கணக்குகளுக்குரிய அங்கீகரிக்கப்படாத திரண்ட செயற்பாட்டு நட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 3.4 மில்லியனாக இருந்தது.

**3.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.8.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட்டு, வழங்குபொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 38,320.06 மில்லியன் தொகையான நிதியேற்பாடும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்களின் மூலம் ரூபா 5,565.06 மில்லியன் நிதியேற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

2009 யூன் 29 ஆந் திகதிய DMA/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடமொன்றிற்கு ஆகக்குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் 04 கூட்டத்தடவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டின் போது குழுவின் 02 கூட்டத்தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(i) புகையிரத திணைக்களத்திற்குரிய 12,000 ஏக்கர் பரப்பளவான காணி குத்தகைக்கோ அல்லது வேறு எந்த செயற்பாட்டிற்கோ பயன்படுத்தப்படாமல் சுமார் 150 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) ரூபா 5,086,986 நாணயக் கடித பெறுமதி கொண்ட 1,000 இலத்திரனியல் கட்டுப்பாடுகள் 2011 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்டு அப்பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. எதிர்பார்க்கப்பட்ட அமைப்புக்குறிப்பீடுகளுடன் பொருந்தாமையின் அடிப்படையில், அது தொடர்பில் குறித்த கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2015 யூன் 07 ஆந் திகதி அந்த கம்பனி திணைக்களத்திற்கு வருகை தந்து குறித்த நடவடிக்கையை பூர்த்தி செய்ய சந்தர்ப்பமொன்றை கோரியிருந்த போதிலும், 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக திணைக்களத்தால் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 5,086,986 தொகையான இருப்புக்கள் விளைவற்று சுமார் 05 வருட காலமாக களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(iii) 1995 ஆம் ஆண்டின் போது ரூபா 33 மில்லியனுக்கு அண்மிய தொகையொன்றை செலவழித்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொள்கலன் போர்க் லிப்ட் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் கொழும்பு புகையிரத நிலையத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(iv) திணைக்களத்திற்கு சொந்தமான 21 புகையிரத என்ஜின்கள், 04 புகையிரத மேடைகள், 22 போகி கெல், 04 சக்கரங்களையுடைய 02 கெல்கள், மோட்டார் வாகனமொன்று மற்றும் 22 இயந்திர அலகுகள் விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தால் அதன் 03 உப திணைக்களங்களுக்கு கீழான 21 கிளை அலுவலகங்களுக்குரிய மெய்மையாய்வு அறிக்கைகள் 2016 யூலை 18 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பாய்வுச் சபையின் அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமாக காணப்பட்ட 04 மோட்டார் வாகனங்கள் முறையாக கையேற்கப்படாமல் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 340.39 மில்லியனாக இருந்ததுடன், அவை வருடமொன்றிற்கு குறைந்த காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

## 3.10 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | 74,548,474 | புகையிரத திணைக்களத்திற்குரிய இரத்மலானையில் அமைந்துள்ள 696 உத்தியோகபூர்வ இல்லங்களில் வசித்துவரும் உத்தியோகத்தர்களின் நீர்ப் பட்டியல்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 115(3)(ஆ) | 12,839,333 | மூன்று சந்தர்ப்பங்களில் முன்னைய ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உதிரிப்பாகங்களுக்காக மீளாய்வாண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 128(1)(எ) | 13,074,314 | 2015 ஆம் ஆண்டின் போது 39 சந்தர்ப்பங்களில் 186 பற்றுச்சீட்டுக்களுக்காக 21 நாட்கள் முதல் 963 நாட்கள் வரையான காலப்பகுதியினுள் பொருட்களை விடுவித்துக் கொள்ளல் தாமதமடைந்தமையின் காரணத்தால் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு தாமதக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. |

**(இ) புகையிரத திணைக்களத்தின் பொது அறிவுறுத்தல் கோவை**

| | | | |
|---|---|---|---|
| (i) | xi ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு | 18,579,511 | புகையிரத நிலைய நாளாந்த வருமானம் உரிய திகதியில் புகையிரத கணக்காளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | xi ஆம் அத்தியாயத்தின் 2.17 ஆம் பிரிவு | - | புகையிரத நிலையங்களுக்கு நாளாந்தம் கிடைக்கும் வருமானங்களை புகையிரத தலைமைக் கணக்காளருக்கு அனுப்பி வைத்து அந்த வருமானங்கள் நாளாந்தம் இணக்கஞ் செய்யப்பட்டு சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் போது 01 முதல் 12 மாதங்கள் வரையான காலவீச்சில் 337 புகையிரத நிலையங்களின் பிரயாணிகளின் வருமானமும், 263 புகையிரத நிலையங்களின் பருவக்காலச்சீட்டு வருமானங்களும், 303 புகையிரத நிலையங்களின் பொதிகளை கொண்டு செல்லும் வருமானங்களும் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 1998 நவம்பர் 05 ஆந் திகதிய படா/அவசர முற்பண செலுத்துதல் 98 கொண்ட புகையிரத ஆணையாளரின் சுற்றறிக்கையின் 02 ix பந்தி | 7,345,502 | பெற்றுக்கொண்ட முற்பணங்களை வாரமொன்றிற்குள் ஒப்படைத்து அந்த முற்பணங்களை தீர்க்க வேண்டிய போதிலும், 2015 நவம்பர் 27 ஆந் திகதி வரையிலும் புகையிரத நிலைய நாளாந்த வருமானத்திலிருந்து பெற்றுக்கொண்ட முற்பணங்கள் பல வருடங்களாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.11 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் வெளிநாட்டு நிதியளித்தலின் கீழ் 05 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அதன் மதிப்பிடப்பட்ட கிரயங்களின் கூட்டுத்தொகை ஐக்கிய அமெரிக்க டொலர் 692.27 மில்லியனாக இருந்தது. அந்த செயற்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 16,978.43 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்

வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் நிதிச் செயலாற்றல் மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

**(i) சமிக்ஞை மற்றும் மின்சார தொலைத்தொடர்பு செயற்திட்டம்**

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **உத்தரவாதக் காலத்தினுள் புகையிரத நிலையங்களை கையேற்காமை**

  ---

  சமிக்ஞை முறைமை பொருத்தப்பட்டிருந்த 26 புகையிரத நிலையங்களில் ரூபா 4,567 மில்லியன் கிரயமான 10 புகையிரத நிலையங்களின் 03 வருட உத்தரவாத கால எல்லை 2016 செப்தம்பர் 20 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. விசேட ஒப்பந்த நிபந்தனை (Particular Conditions of Contract) 21 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த செயற்திட்டம் அலகினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. அந்த காரணத்தால் அந்த புகையிரத நிலையங்களில் உபகரணங்கள் பழுதடைந்தால் அது தொடர்பில் ஒப்பந்ததாரருக்கு பொறுப்பொன்று இல்லாதிருந்தமையால் திணைக்களத்திற்கு மேலதிக கிரயமொன்றை ஏற்க நேரக்கூடியதாக இருந்தது.

- **புகையிரத நிலையங்களுக்கான சமிக்ஞை உபகரணங்களை பொருத்துதல்**

  ---

  ஒப்பந்த உடன்படிக்கையின் vii ஆம் அத்தியாயத்தினை நிர்மாணிக்கும் (Design) போது சமிக்ஞை முறைமை பொருத்தப்பட்டிருந்த 26 புகையிரத நிலையங்களில் பாரிய புகையிரத நிலையங்கள் மற்றும் சிறிய புகையிரத நிலையங்கள் என தெளிவாக இனங்காண முடியாமையின் குறைபாடுகளினால் ஒப்பந்ததாரருக்கு சுமார் ஐக்கிய அமெரிக்க டொலர் 469,462 அல்லது சுமார் ரூபா 62 மில்லியன் பணம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த பணத்தை அறவிடுவதற்கு 2016 செப்தம்பர் மாதம் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- **அலகு கிரயம் கணிப்பீடு செய்தல் தொடர்பான சான்றுகள்**

  ---

  செயற்திட்டத்தின் கீழான பாரிய மற்றும் சிறிய புகையிரத நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த சமிக்ஞை உபகரணங்களின் கிரயத்திற்கிடையே ரூபா 62 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அந்த அசாதாரணமான அலகுக் கிரயம் அதிகரித்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவாக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- **கொள்வனவு செற்றப்பட்ட சமிக்ஞை உபகரணங்களின் தரம் குறைவடைதல்**

  ---

  ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனை 4.9 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரரால் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களின் தரம் தொடர்பான சான்றிதழொன்றை செயற்திட்டத்திற்கு வழங்க வேண்டுமெனினும், ஒப்பந்ததாரரால் கொள்வனவு செய்யப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 2,082,360 அல்லது சுமார் ரூபா 274 மில்லியன் பெறுமதியான 740 Location Boxes இற்காக அமெரிக்க டொலர் 1,486,296 அல்லது ரூபா 196 மில்லியன் பெறுமதியான 189 Point Machine ஆகியன செயற்திட்டம் முடிவடைந்து ஒரு வருட காலப்பகுதியினுள் துருப்பிடித்தலுக்கு உள்ளாகி செயற்பாடற்று காணப்பட்டன.

- **தேவைப்பாட்டினை முறையாக இனங்காணாமல் கொள்வனவு செய்தல்**

  புகையிரத நிலைய அதிபர் அறைகளில் தாபிக்கப்பட்டிருந்த சமிக்ஞை முறைமையை கட்டுப்படுத்தும் உபகரணமொன்று பொருத்தப்பட்டுள்ள போதிலும் ஒப்பந்ததாரரால் 56 Bloke Instrument கள் 26 புகையிரத நிலையங்களுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 628,888 அல்லது ரூபா 83.01 மில்லியன் கிரயத்தில் பொருத்தப்பட்டிருந்தன. இந்த உபகரணங்கள் தேவைப்பாட்டிற்கு பொருத்தமற்றவை என்பதால் அதற்காக செலவிடப்பட்ட பணம் சிக்கனமற்றதாகியிருந்தது.

- **வாகனக் கட்டுப்பாடு**

  ஒப்பந்ததாரரால் செயற்திட்டத்தின் வீதிப் பரிசோதனைக்காக 06 ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஒப்பந்த உடன்படிக்கையின் 9.1 ஆம் நிபந்தனையின் பிரகாரம், ஒப்பந்ததாரரால் செயற்திட்டத்தில் முடிவில் செயற்திட்ட அலுவலகத்திற்கு அந்த வாகனம் கையளிக்கப்பட வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட 06 வாகனங்களில் 05 வாகனங்கள் செயற்திட்ட அலுவலகத்திற்கு ஒப்பந்ததாரரால் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், 20 ஆம் இலக்க உள்ளக கொடுப்பனவு சான்றிதழ் பத்திரத்தின் கீழ் எஞ்சிய வாகனத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 20,800 தொகை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனம் செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்கு முறையாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மொத்தக் கிரயம் ஐக்கிய அமெரிக்க டொலர் 156,000 பெறுமதியான 06 வாகனங்களை முறையாக உரிய உத்தியோகத்தர்களுக்கு கையளித்தல் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii) மடு தலை மன்னார் புகையிரத பாதை செயற்திட்டம்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகினன்றன.

- **கொன்கிறீட் சிலிப்பர்கள் பழுதடைதல்**

  மடு தலை மன்னாரின் புகையிரத பாதை செயற்திட்டம் தொடர்பில் 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

  - புகையிரத பாதைகளுக்கு இடப்பட்டிருந்த சிலிப்பர் கட்டைகள் பழுதடைந்திருந்ததுடன், ஒப்பந்தக் கம்பனி அந்த பழுதடைந்த சிலிப்பர் கட்டைகளை அகற்றி புதிய சிலிப்பர் கட்டைகளை இட ஆரம்பித்திருந்தது.

  - கொங்கிறீட் சிலிப்பர்களை புகையிரத பாதையில் இடுவதற்கு முன்னர் தரம் தொடர்பில் பரிசோதிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு பரிசோதிக்கப்பட்டமை தொடர்பில் உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- **பாலங்களை மீள நிர்மாணித்தல்**

  மடு தலை மன்னார் வரையான புகையிரத பாதையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 பாலங்கள் குறைபாடுகளுடனான நிலையில் இருந்தமையால் அந்த பாலங்கள் அகற்றப்பட்டு புதிய பாலங்களை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த கம்பனி உடன்பட்டிருந்தது. 2016 செப்தம்பர் 30 ஆந் திகதியில் அவற்றின்

நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் உடன்படிக்கை காலம் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் காலம் 2016 திசெம்பர் 13 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தது. இந்தக் காலப்பகுதியினுள் மேற்படி பணியை பூர்த்தி செய்வதற்கு தேவையான உடனடி நடைமுறைகளை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமையால் செயற்திட்டத்திற்கு மேலதிக செலவினமொன்றை ஏற்கவேண்டிய அபாயமொன்று நிலவியது.

## 3.12 உள்நாட்டு நிதியளித்தலின் மூலம் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

### (அ) பணிகளை ஆரம்பிப்பதில் தாமதமடைந்த செயற்திட்டங்கள்

மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 50 மில்லியன் பெறுமதியான நிலத்தோடு இணைந்த எழுதும் பட்டியல்களைப் பொருத்தும் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எஞ்சிய வேலைகளின் பெறுமதி ரூபா 47 மில்லியனாக இருந்தது. அந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி புகையிரத் திணைக்களம் மற்றும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் ஆகிய இரு தரப்பினரிடையே ரூபா 31.45 மில்லியன் பெறுமதிக்கு இணக்கப்பாட்டு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி வரையிலும் அந்த செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றத்தைப் பெற்றிராத செயற்திட்டங்கள்

புகையிரத திணைக்களத்தின் காணிகள் பிரிவின் கோவைகளை கணனிமயப்படுத்தல் மற்றும் அந்த தகவல் முறைமையின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2 மில்லியன் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு ரூபா 1.39 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 01 வருடமும் 10 மாதங்களும் கடந்திருந்த போதிலும், அந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டத்தினை அடைவதற்கு முடியாமல் போயிருந்தது.

## 3.13 வங்கிக் கணக்குகளை செயற்பாடுத்தவதிலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### (அ) வங்கி இணக்கக்கூற்றுக்களை தயாரிப்பதிலான நீண்ட கால தாமதங்கள்

வங்கிக் கணக்கொன்றிற்கு உரியதாக 2015 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான வங்கி இணக்கக் கூற்றுக்கள் 2016 சனவரி 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயலற்ற வங்கி கணக்கு**

திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்த சேமிப்புக் கணக்கொன்று 12 வருடங்களும் 2 மாதங்களும் கொண்ட காலம் முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயலற்று காணப்பட்டதுடன், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி அதன் மீதி ரூபா 1,991,312 ஆக இருந்தது

**(இ) சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

புகையிரத திணைக்களத்தினால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி வெளியிடப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | **சீராக்கல் தொடர்பான விபரம்** | **காலப்பகுப்பாய்வு** | | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | | **06 மாதங்களிற்கு மேல் 01 வருடத்திற்கு குறைந்த** | **01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்கு குறைந்த** | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புக்கள் | 528,140 | - | 528,140 |
| (ii) | வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 2,560,311 | 1,802,947 | 4,363,258 |
| (iii) | இனங்காணப்படாத செலவுகள் | - | 134,400 | 134,400 |
| (iv) | போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாத மதிப்பிழந்த காசோலைகள் | 1,817,257 | - | 1,817,257 |
| (v) | எனைய சீராக்கங்கள் | 97,990 | 210,260 | 308,250 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரு வங்கிக் கணக்குகளுக்குரிய வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களை கடந்த ரூபா 2,059,268 கூட்டுப் பெறுமதியான 94 காசோலைகள் மற்றும் ரூபா 2,303,990 கூட்டுப் பெறுமதியான 17 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 395 (உ) இன் பிரகாரம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு தீர்க்கப்படாத காசோலைகள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், வங்கிக் கணக்கொன்றிற்குரிய ரூபா 46,517,321 பெறுமதியான தீர்க்கப்படாத காசோலைகள் தொடர்பில் அவ்வாறானதொரு பட்டோலையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வங்கிக் கணக்கொன்றுக்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி ரூபா 1,817,257 ஆக இருந்த போதிலும், அது தொடர்பில் பட்டோலையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2015 திசெம்பர் மாதம் வரையிலும் 07 சந்தர்ப்பங்களுக்குரியதாக இனங்காணப்பட்ட வங்கிக் கணக்கொன்றில் ரூபா 540,319 தொகையான வழுக்கள் சீராக்கி காசுப் புத்தகத்தினை திருத்துவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) வங்கிக் கணக்கொன்றிற்குரியதாக 2013 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திற்காக வங்கி கணக்கிணக்கக் கூற்றின் மூலம் இனங்காணப்பட்ட ரூபா 144,101 பெறுமதியான வங்கிக் கணக்கின் வழுக்கள், 2015 திசெம்பர் மாதம் வரையிலும் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.14 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டின் போது நாளொன்றிற்கான கட்டணம் ரூபா 1,360 மற்றும் பெறுமதிசேர் வரியுடனான கட்டணம் ரூபா 163.20 வீதம் 20 ஊழியர்களுக்காக ரூபா 1,220,083 தொகை தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் கட்டுமான கம்பனியொன்றாவதுடன், ஊழிய வழங்கல் செய்யும் நிறுவனமொன்றல்ல என்பதால் ஊழியர்களின் தகுதிகள் மற்றும் சேவை அனுபவம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்காமல் ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருந்தமை சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கலொன்றாகும்.

### 3.15 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இடம்பெற்றிருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டலின் செயல் நடைமுறையிலிருந்து விலகுதல்

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 4.1 ஆம் பந்தியின் கீழ் பின்வரும் செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகள் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செலவிடப்பட வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1(அ) வழிகாட்டலுக்கு முரணாக மட்டுப்படுத்தப்பட்ட விலைக்கேள்வியாளர்களிடம் விலைக்கேள்விகள் கோரப்பட்டு பெப்ரவரி மாதத்தின் போது ரூபா 50,510,080 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3:3 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக களஞ்சிய அதிகாரசபை அலுவலகத்தால் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 88,690,000 மற்றும் ரூபா 3,909,628 பெறுமதியான கொள்வனவுக்காக அமைச்சின் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 3.4.1 (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 2 மில்லியனிற்கு குறைந்த பொருட்கள் சேவைகள் பெற்றுக்கொள்வதற்கு குறைந்தது 05 முத்திரையிடப்பட்ட விலை கோரல்களிலிருந்து விலைக்கேள்விகள் மதிப்பிடப்பட்டு ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட வேண்டும். 18 வழங்குநர்களுக்கு விலைக்கேள்விகளை சமர்ப்பிக்குமாறு அறிவித்திருந்த போதிலும், அவற்றுள் இருவரின் விலைக்கேள்விகள் மாத்திரம் மதிப்பிடப்பட்டு அந்த இருவரினாலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் அமைப்புக்குறிப்பீடுகளுக்கு இணங்கவில்லை என தெரிவித்து அந்த விலைக்கேள்விகள் மறுக்கப்பட்டிருந்தன. ஆகக்கூடிய விலையான ரூபா 1,979,968 தொகையான விலைக்கேள்வியினை சமர்ப்பித்திருந்த நிறுவனமொன்றிற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(iv) 2015 பெப்ரவரி மாதத்தின் போது ரூபா 50,510,080 தொகையும், ரூபா 51,219,776 தொகையும், ரூபா 10,132,096 மற்றும் ரூபா 83,574,934 தொகை செலுத்தி 600 உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த இருப்பு விடயத்தில் ஆகக்கூடிய இருப்பு அலகுகளின் எண்ணிக்கை 300 ஆக இருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது 600 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், 160 அலகுகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு திட்டத்தின் பிரகாரம் செயற்படாமல் திணைக்களத்தின் நிதி விளைவற்ற விதத்தில் இருப்புக்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(v) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.11(அ) வழிகாட்டலுக்கு முரணாக விலைக்கேள்வி பிணைப்பொறுப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படாமல் 05 சந்தரப்பங்களில் ரூபா 7,173,712 கூட்டுப்பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(vi) மீளாய்வாண்டின் போது ரூபா 338,392 தொகையான கொள்வனவுகளுக்காக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 வழிக்காட்டலுக்கமைய செயலாற்றல் பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) விலைக்கேள்விகளை சமர்ப்பித்திருந்த 04 வழங்குநர்களிடையே தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் இரண்டாவது ஆகக்குறைந்த விலையான ரூபா 196,000 தொகையான விலைக்கேள்வியினை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்ய பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஆகக்குறைந்த கூறு விலையினை உள்ளடக்கிய விலைக்கேள்வியாளரின் உள்நாட்டு பிரதிநிதித்துவ நிறுவனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட 2 சதவீதமான தரகு உள்ளடங்கலாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 147,544 தொகையான ஆகக்குறைந்த விலை உள்ளடங்கிய விலைக்கேள்வி மறுக்கப்பட்டு, இரண்டாவது விலையினை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து 30 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,453,680 தொகை கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது.

(viii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.6 ஆம் வழிகாட்டலுக்கமைய உரிய நடைமுறையில் மாதிரிப் படிவங்கள் பயன்படுத்தப்படாமல் 2015 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தின் போது 06 சந்தரப்பங்களில் ரூபா 50,510,088 கூட்டுத்தொகையான கொள்வனவுகள் இடம்பெற்றிருந்தன.

(ix) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.4.1 ஆம் வழிகாட்டலுக்கமைய விலைக்கேள்வி மதிப்பீடு ஆகக்கூடிய விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பாய்வு 01 மாதம் முதல் 05 மாதங்கள் வரையான கால தாமதம் மற்றும் பெறுகைகள் குழுவின் விதந்துரையின் தாமதத்தின் அடிப்படையில் விலைக்கேள்வியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைக்கேள்விகளின் செல்லுபடியான காலத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் நீடிப்பு செய்ய நேர்ந்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 12.47 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்கள் இரத்மலானை களஞ்சியத்திற்கு கிடைப்பதற்கு பொருட்களுக்கு கட்டளையிடப்பட்ட திகதியிலிருந்து 01 வருடம் 05 மாதங்கள் முதல் 02 வருடங்கள் 05 மாதங்கள் வரையான கால தாமதமொன்று ஏற்பட்டிருந்தது.

(x) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.12.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒரு வழங்குநர் மாத்திரம் விலைக்கேள்வியினை சமர்ப்பித்திருந்த போது அந்த விலைக்கேள்வியானது சந்தை விலையின் அடிப்படையில் நியாயமான கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழுவினால் பரிந்துரை செய்யாமல் ரூபா 5,908,708 பெறுமதியான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3.16 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(அ) போலியாக தயாரிக்கப்பட்ட மருத்துவ சான்றிதழொன்றைச் சமர்ப்பித்து 6,065 விடுமுறை நாட்களைப் பெற்று நிர்ணயிக்கப்பட்ட சேவையில் ஈடுபடாமல் புகையிரத கட்டுப்பாட்டாளர்கள் மோசடியாக ரூபா 4.02 மில்லியன் மேலதிக நேரக் கொடுப்பனவை பெற்றிருந்தனர். அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபனவிதிக் கோவையின் II ஆவது தொகுதியின் I ஆம் அத்தியாயத்தின் (2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய சேவைக்கு வருகையினை பதிவு செய்வதற்காக ரூபா 13 மில்லியன் செலவிடப்பட்டு திணைக்களத்தால் 71 விரலடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தன. அந்த இயந்திரங்களின் விரலடையாளத்தினை வைத்தல் புகையிரத நிலைய அதிபர் சேவை, புகையிரத ஓட்டுநர் மற்றும் புகையிரத கட்டுப்பாட்டாளர் சேவை போன்ற பல்வேறு பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களால் நிராகரிக்கப்பட்டிருந்தது. பதவியணியினரால் குறித்த மேலதிக நேர மணித்தியாலயங்களின் எண்ணிக்கை, விடுமுறைத்தின சம்பளம் செலுத்தல் தரவுகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது போயிருந்தது.

**3.17 நட்டமும் இழப்பும்**

--------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான திணைக்களத்தில் காணப்பட்ட உடைந்த 4,454.78 மெற்றிக் தொன் இரும்பு மற்றும் வீதிகள் மற்றும் கைத்தொழில் உப திணைக்களத்தின் பாவனைக்கு பொருத்தமற்ற 2,552.58 மெற்றிக் தொன் புகையிரத தண்டவாளங்களையும் பெறுமதியிட்டு ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலாவதியான மற்றும் பயன்படுத்தப்படாத பொருட்களால் ஏற்பட்ட நட்டமாக ரூபா 13,829,758 ஆன மீதிகள் வருடக் கணக்காக தொடர்ந்தும் கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. அம்மீதியை பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளின் பிரகாரம் இன்டென்டு இலக்கம் 04 இன் கீழ் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 13,554,271 தொகையான பொருட்கள் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த பொருட்கள் கிடைக்காமல் போவதற்கோ அல்லது சிக்கனமற்ற முறையில் துறைமுகம் கட்டணத்தை செலுத்த நேரும் ஆபத்தொன்று நிலவியது.

(ஈ) உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது கூறுவிலைகளை கோரும் கடிதத்தின் நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் வழங்குநரால் கட்டளைகளை ஒப்படைத்த திகதியிலிருந்து பொருட்களை விநியோகிக்க வேண்டிய கால எல்லை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த காலப்பகுதியினுள் உதிரிப்பாகங்கள் விநியோகிக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்காக ரூபா 290,157 தொகையான தாமதக் கட்டணம் உரிய வழங்குநரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) புகையிரத வலையமைப்பினுள் விளம்பர அறிவித்தல்களை பிரசித்திப்படுத்தல் தொடர்பான முழு உரித்து வெளித்தரப்பினரொருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2011 செம்தம்பர் 07 ஆந் திகதி அந்த நிறுவனத்துடன்திணைக்களம் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த நிறுவனம் செயற்படாமையால் புகையிரத் திணைக்களத்திற்கு ரூபா 425 மில்லியன் தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஊ) திணைக்களத்தினுள் ஏற்பட்டிருந்த ரூபா 293.67 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.18 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9.33 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்கள், உராய்வுநீக்கி எண்ணெய் போன்ற 3,816 பொருள் அலகுகள் கணக்காய்வு திகதியான 2016 சனவரி 05 ஆந் திகதி வரையிலும் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 60 ரோல் பெயாரின்களை கொள்வனவு செய்வதற்காக தேசிய/சர்வதேச போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரலின் அடிப்படையில் 05 விலைக்கேள்விகள் கிடைத்திருந்தன. அந்த விலைக்கேள்விகளிடையே ஆகக்குறைந்த கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து ஒவ்வொன்றும் ரூபா 8,662 வீதம் ரூபா 519,720 இற்கு கொள்வனவு செய்யும் இயலுமை உள்ள போது, வேறு கம்பனியொன்றிடமிருந்து ஒவ்வொன்றும் ரூபா 65,160 படி 60 பெயாரின்களை கொள்வனவு செய்தமையால் ரூபா 3,389,880 தொகை அந்த நிறுவனத்திற்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கூறு விலைகளை சமர்ப்பித்திருந்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பெறுகை அறிவித்தலின் மதியுரைக் கோவையின் 6 (b) பந்தியின் பிரகாரம் வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள் ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியானது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த வழங்குநர்களிடம் அது தொடர்பில் விசாரணை செய்யப்பட்ட சான்றுகளை பரிசீலனை செய்யும் போது அவ்வாறான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்யும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வழங்குநரிடமிருந்து ஆகக் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தமையால், அரசிற்கு ரூபா 2,360,137 தொகையினை கூடுதலாக செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 4,483 மில்லியன் பெறுமதியான நிரந்தர வீதி உபகரணத் தொகுதியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உபகரணத்தொகுதி விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போதும் மீளாய்வாண்டின் போது ரூபா 50 மில்லியன் பெறுமதியான நிரந்தர வீதி உபகரண இருப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மாவட்ட பொறியியலாளர் (மத்திய) அலுவலகத்தின் கீழான கட்டிடப் பிரிவில் உள்ள பதவியணியில் 500 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையானவர்கள் உரிய பணித் திட்டமொன்றின் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் தனியார் துறையிலிருந்து பெற்றுக்கொண்ட 20 ஊழியர்களுக்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1.22 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 1987 சனவரி 05 ஆந் திகதிய 887 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் மேலதிக கூலி குறித்த ஆண்டிற்காக மாத்திரம் அங்கீகரிப்பதற்காக குறிப்பிடப்பட்டிருந்தது. அடுத்த வருடத்திற்காக விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணான வகையில் 04 நிறுவனங்களுக்குரிய 821 வீடுகளுக்காக சில வருடங்களுக்கு முன்னர் மதிப்பீடு செய்யப்பட்ட பொருளாதார கூலியே தற்போதும் அறவிடப்பட்டிருந்தது.

(எ) 2010 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 5/2010 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம், சம்பளங்கள் நேரடியாக ஊழியர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். புகையிரதத் திணைக்களத்தின் கொழும்பிற்கு வெளி மாகாணங்களின் ஊழியர் பதவியணியின் சம்பளங்கள் காசாக செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக சிராப்பர் பதவியணி மற்றும் புகையிரத பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர படிகள், போக்குவரத்துப் படிகள், புகையிரத மேடைகளை ஒதுக்குதல் போன்ற பணிகளுக்காக 2015 சனவரி மாதத்தில் மாத்திரம் ரூபா 511,451 தொகை விளைவற்ற செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஏ) திணைக்களத்திற்குரிய வளாகங்களில் பொருத்தப்பட்டிருந்த தானியங்கி டேலர் இயந்திரங்களுக்குரியதாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வங்கிக் கணக்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 224,670 தொகையான மின்சாரக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி சாவடிகளுக்காக 2004 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,651,187 தொகையான அறவீடுகள் நிலுவையாக இருந்தன. 2004 யூன் 30 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய தொகை மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. டிரய்டெல் தொலைபேசி சாவடிகளுக்காக அந்த நிறுவனத்திலிருந்து 2004 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இனங்காணப்பட்ட ரூபா 3,861,103 தொகையான வருமானம் இனங்காணப்பட்டிராததுடன், தொடர்ந்தும் இனங்காணப்படாத வருமானத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) புகையிரத மேடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு இரண்டு தனியார் நிறுவனங்களுடன் புகையிரதத் திணைக்களம் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கைகளின் தெளிவின்மை காரணமாக அந்த நிறுவனம் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை தீர்மானிப்பதற்கு முடியாது போயிருந்தது. 2016 மார்ச் 29 ஆந் திகதிய C/SU/புளு லயின்/2016 ஆம் இலக்க வியாபார மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரின் கடிதத்தின் பிரகாரம் ஒரு நிறுவனத்திடமிருந்து ரூபா 36,658,140 தொகை 2014 ஆம் ஆண்டு முதல் பெற வேண்டியதாக இருந்தது. மற்றைய கம்பனியிடமிருந்து 2013 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை ரூபா 558,970 தொகை பெற வேண்டியதாக இருந்தது. குறித்த கம்பனிகளிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 11 சிறு விற்பனை நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,383,500 தொகையினை 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) புகையிரதத் திணைக்களத்தினால் வெளித்தரப்பினருக்கு கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது 05 கடைகளுக்காக குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த 08 கடைகளுக்குரியதாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 756,025 (பெறுமதிசேர் வரி உள்ளடங்களாக) தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.19 முகாமைத்துவ நலிவுகள்**

-------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதிப்பாய்வுச் சபையின் அறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம், பொருட்களை கப்பலேற்றுவதற்கு முன்னர் பரிசீலிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மதிப்பாய்வுச் சபையின் தீர்மானத்தை மீறி அவ்வாறானதொரு பரிசோதனையின்றி ரூபா 11,871,726 தொகையான நுழைவுச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 05 கொள்வனவு சந்தர்ப்பங்களில் ரூபா 13,799,731 பெறுமதியான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் கட்டளையிடப்பட்ட பிரமாணக் குறிப்புகளுக்கமைய தகுதிச் சான்றிதழினை பெற்றுக்கொள்ளாமல் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 02 சந்தர்ப்பங்களில் ரூபா 661,489 பெறுமதியான பொருட்களுக்கான பொருள் பெறுவனவு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின் 45 பொருள் பெறுவனவு பத்திரங்களுக்குரிய ரூபா 8,883,224 பெறுமதியான பொருட்கள் குறை விநியோக நிலைமையிலும், ரூபா 550,177 பெறுமதியான பொருட்கள் அழிவு நட்ட நிலைடையிலும், ரூபா 2,028,905 பெறுமதியான பொருட்கள் பாவனைக்கு பொருத்தமற்ற நிலையிலும் காணப்பட்டதுடன், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அதற்காக உரிய நியமத்திலான பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1998 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை தீர்க்கப்படாத ரூபா 35,715,003 பெறுமதியான நாணயக் கடிதங்களுக்குரிய பொரட்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அத் திகதி வரையில் அந்த பொருட்களின் விநியோகத்திற்காக 07 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலவீச்சிலான தாமதம் ஏற்பட்டிருந்தது.

(உ) 2011 யூலை 27 ஆந் திகதி இரத்மலானை களஞ்சிய பிரிவிற்கு கிடைத்திருந்த ரூபா 914,358 பெறுமதியான பொருட்கள் திணைக்களத்தின் மாதிரிகளுடன் இணங்கியிருக்கவில்லை. அதற்கு பதிலாக சரியான பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு 2016 மே வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1993 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொருட்களின் இறக்குமதியின் போது சுங்கக் கட்டணங்களாக ரூபா 205,142,308 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்தக் கிரயத்தினை 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் இருப்பிற்கு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1993 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய சீராக்கம் செய்யப்படாத நிலுவையான சுங்கக் கட்டணங்களின் மீதி ரூபா 89,568,098 ஆக இருந்தது.

(எ) ரூபா 3,314,700 முகப்பெறுமதி கொண்ட நுழைவுச்சீட்டுக்களின் இருப்பொன்று சுமார் 15 வருட காலமாக பாவனைக்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஏ) இரத்மலானையில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வீடுகள் தொடர்பில் நீர்மானிகள் பொருத்துவதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் ரூபா 77 மில்லியன் பெறுமதியான மதிப்பீடொன்று வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் திணைக்களத்தால் பொருத்தமான நடைமுறையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன், அந்த வீடுகளுக்காக 2004 சனவரி மாதம் முதல் 2015 யூலை மாதம் வரையிலும் நீர்ப் பட்டியல் கட்டணங்களாக ரூபா 72 மில்லியன் தொகை திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. நீர்மானிகள் பொருத்தப்படாமையால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருந்தது.

(ஐ) மாவட்ட பொறியியலாளர் (மேல்) இனால் 07 நிலையான வீதிப் பரிசோதனை அலுவலகங்களின் கீழ் குரித்துரைக்கப்பட்ட நடைமுறையொன்றினை தயாரிக்காமல் வீதியில் கருங்கற்கள் இடப்பட்டிருந்தன. அதற்காக முறையே 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டகளின் போது கருங்கற்களை கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் ரூபா 43,688,713 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஒ) புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குவதுடன் தொடர்புடைய 5,280 சுழற்சிக் கடிதங்களுக்கு உரியதாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 1,276,987,437 மில்லியனாக இருந்ததுடன், அந்த பணத்தை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) புகையிரத பொருட்களின் போக்குவரத்திற்காக மிளாய்வாண்டில் 12 நிறுவனங்களிடமிருந்து ரூபா 70,702,827 தொகையும், 2000 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 22 நிறுவனங்களிடமிருந்து ரூபா 30,345,368 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பொருட்களின் கொள்வனவிற்காக 1980 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியினுள் வழங்குநர்களுக்காக ரூபா 15,969,069 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 3,907,621 பெறுமதியான முற்பணங்கள் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. அந்த முற்பணங்களை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறதி வரையிலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டின் போது புகையிரதத் திணைக்களத்தினால் அரச அச்சகத்திற்கு 33,000,000 பிரயாணச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. அரச அச்சகத்தினால் 24,364,500 பிரயாணச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 8,635,500 தொகையான பிரயாணச் சீட்டுக்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளமைக்கான தகவல்கள் அரசாங்க அச்சகத்தில் பேணிச் செல்லப்படும் புத்தகங்கள் மூலம் உறுதிசெய்ய முடியாதிருந்தது.

(கா) அரசாங்க அச்சகத்தின் அச்சீட்டுப் பிரிவில் அச்சிடப்படாத 04 தொகுதிகளுக்குரிய 228,000 நுழைவுச்சீட்டுக்கள் காணப்பட்டன. அவற்றை மீள புகையிரத திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.20 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 212 | 92 | 120 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 2,909 | 2,071 | 838 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 8,500 | 5,018 | 3,482 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 8,601 | 8,026 | 575 | - |
| (v) | ஏனையோர்(அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 2,107 | - | 2,107 |
| | **மொத்தம்** | **20,222** | **17,314** | **5,015** | **2,107** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலான 5,051 வெற்றிடங்கள் நிலவின. திணைக்களத்தால் அந்த வெற்றிடங்களை முறையாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது 2,107 ஊழியர்களை அமைய பதவியணியினராக முறையான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது இடர் முகாமைத்துவ அமைச்சிற்கு முகாமைத்துவ ஊழியர் ஒருவர் முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

**(இ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தால் உணவுத் திணைக்களத்தின் கப்பற்துறை உத்தியோகத்தர் ஒருவர் முறையற்ற விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தார்

**(ஈ) ஓய்வு பெற்றவர்களை மீள சேவைக்கமர்த்துதல்**

இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் திணைக்கள சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்த பின்வரும் உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

| **ஊழியர் வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| புகையிரத என்ஜின் சாரதி | 12 |
| புகையிரத காப்பாளர் | 47 |
| புகையிரத நிலைய அதிபர் | 40 |
| புகையிரத மேற்பார்வை முகாமையாளர் சேவை | 14 |
| ஆரம்ப தொழில்நுட்ப அலுவலர் (நிர்வாகம்) | 02 |
| வானிலை எழுதுனர் | 03 |
| போக்குவரத்து உப திணைக்களம் | 20 |
| ஷன்டர் சாரதி | 12 |
| சாரதி உதவியாளர் | 32 |
| சிரேஷ்ட நிலை | 02 |
| **மொத்தம்** | **184** |